**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்.370 நாள்: 10.08.2026

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை வட்டார துணை ஆணையாளர் அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அண்ணாநகர் மற்றும் வளசரவாக்கம் மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து வட்டார துணை ஆணையாளர்கள் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.அ..தாப் ரசூல், இ.ஆ.ப., (தெற்கு) ஆகியோர் இன்று (10.08.2026) பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

அண்ணாநகர் மண்டலம், வார்டு-101க்குட்பட்ட அண்ணாநகர் 6வது அவென்யூவில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டியில் இருந்து வண்டல் மண் அகற்றும் பணி, கௌனால் சாலையில் உள்ள ஓட்டேரி நல்லா கால்வாயில் ரோபோடிக் எஸ்கவேட்டர் மூலம் நடைபெற்று வரும் தூர்வாரும் பணி, வார்டு-99க்குட்பட்ட பிரிக் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, வளசரவாக்கம் மண்டலம், வார்டு-149க்குட்பட்ட ஆற்காடு சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, வார்டு-151க்குட்பட்ட போரூர் சந்திப்புப் பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணி, வளசரவாக்கம் மண்டலம், பால்வாடி 2வது தெருவில் உள்ள வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளை வட்டார துணை ஆணையாளர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், இதர வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாரும் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், அண்ணாநகர் மண்டலம், வார்டு-97க்குட்பட்ட அயனாவரம் டேங்க் சாலையில் உள்ள வீட்டில் மாநகராட்சி அலுவலர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் அவர்கள், வளசரவாக்கம் மண்டலம், பால்வாடி 2ஆவது தெருவில் மேற்கொள்ளப்படும் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்களின் குப்பைக் கழிவுகளை தரம் பிரித்தெடுக்கும் பணி, வார்டு-144க்குட்பட்ட மவுண்ட் பூந்தமல்லி சாலையில் கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுமானப் பணி, பால்வாடி 2ஆவது தெருவில் பயன்படுத்தப்படாத, பழுதடைந்த மின் கம்பத்தினைப் பார்வையிட்டு சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், வார்டு-145க்குட்பட்ட மவுண்ட் பூந்தமல்லி சாலையில் உள்ள அம்மா உணவகத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் சமையலறையினை ஆய்வு செய்து, தூய்மையாகப் பராமரித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின்போது மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**